முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**ஏ.ஆர்..ஓ.பி. 25/2024**

**நாள்.24.10.2024**

ம.சா.1 திரு. பாலசுப்பிரமணியன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1, 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தானது சூரங்கோட்டை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தானது தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்ப்ட்டதற்கு எதிர்மனுதாரர் தினசரி நாளிதழில் அறிவிப்பு அனுப்பியது எனக்கு தெரியும். நில ஆர்ஜித அதிகாரி என்னுடைய ஆட்சேபனையின்பேரில் என்னை விசாரணை செய்தார். ஆர்ஜிதம் செய்யப்பட்ட காலத்தில் இந்த ஆர்ஜிதம் நிலம் நஞ்சை நிலமாக இருந்தது. தற்போது மனைநிலங்களாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது அந்த நிலம் நஞ்சை நிலமாகத்தான் உள்ளது என்றும் அதிக இழப்பீடு பெற அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் அதிகாரி முறையான விசாரணை செய்துதான் மேலும் என்னுடைய ஆட்சேபனையை கருத்தில் கொண்டுதான் ஆர்ஜிதம் தொகை முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தின் சர்வே எண் 175/3 ஆகும். சர்வே எண் 220/2 பி என் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த மனுவுடன் ஆர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன்பாக உள்ள ஆவணங்களைத்தான் தாக்கல் செய்துள்ளேன். சந்தை மதிப்பிற்காக மேற்படி ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட அதிகாரியானவர் களவிசாரணை செய்து சந்தை மதிப்பை கணக்கீடு செய்து

வழிகாட்டுதல் மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரும் என்னுடைய ஆட்சேபனையின்பேரில் ஆட்சேனை மனுவை பரிசீலனை செய்து சரியானபடி மதிப்பை நிர்ணயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுவானது சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் மாதிரி நிலங்கள் உள்ளதால் அதை தாக்கல் செய்தால் மனுவிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் என்னுடைய நிலம் மற்றும் மாதிரி நிலத்திற்கு உண்டான புலப்படங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தானது 1 செண்ட் ரூ.1 லட்சம் என்று மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நிவாரண தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் உத்தரவு சரியானது என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .